**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 172/2024 P.W. 10/L.W.9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. பிரேம் ராஜா பிரனேஷ் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 08.06.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜரில்லை. 317(1)ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டது. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வழக்கறிஞராக பணிச் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியாது. அ.சா1ஐ எனக்குத் தெரியாது. 2023ம் வருடம் நான் ஒருநாள் எனது அலுவலை முடித்து விட்டு நீதிமன்றத்தின் வெளியே நின்றுக்கொண்டிருந்தபோது சத்தம் கேட்டது. நான் வந்துப் பார்த்தபோது சண்டை நடந்துக்கொண்டிருந்தது. வழக்கு சம்பவம் பற்றி வேறு எதுவும் எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 22.04.2024ம் தேதி 14.15 மணிக்கு வழிக்காவல் அரசு அலுவலாக நாகர்கோவில் மாவட்ட சிறையிலிருந்து விசாரணை கைதிகளை இரணியல் குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திவிட்டு உள்தளத்தில் போலீசார் காத்திருந்தபோது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தனது நண்பர்களை பார்க்க அனுமதிக்கும்படி கேட்டார்கள் என்றும், அனுமதி கொடுக்காததால் சாட்சிகள் 1 முதல் 7 ஆகியோர்களைப்பார்த்து தகாத வார்த்தையால் பேசினார்கள் என்றும் அரசு

பணியைச்செய்யவிடாமல் தடுத்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்சமயம் நான் வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

**இல்லை .**

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.